செய்ய வேண்டும். (குறுக்கீடு) பிரைமா பேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பது பற்றிப் பேரவைத் தலைவர் தான் முடிவெடுக்க வேண்டும். பிரைமாபேஸி கேஸ் இருக்கிறது என்றால்தான் அதைக் கொண்டு வருவதற்கு அவர்கள் அனுமதிப்பார்கள். எனவே, பேரவைத் தலைவர் வந்தவுடன் அவரோடு பேசி முடிவெடுக்கலாம்.

திரு. நா. சுந்தரராஜ்: நான் 31 ஆம் தேதியே கொடுத்து விட்டேன். இன்றைக்கு பத்தாம் தேதி ஆகிவிட்டது. அது பேரவைத் தலைவரின் அலுவலகத்தில் தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைத் தலைவரின் அலுவலகத்தில் தாங்கள் கொடுத்திருந்தாலும் அதை ஆய்வு செய்ய வேண்டாமா; பரிசீலனை செய்ய வேண்டாமா? எனவே, இதுகுறித்து நாளைக்குச் சொல்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினை என்பதால் இதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். கடந்த 4 மாத காலமாக கைத்தறித் தொழிலாளர்கள் அரசு நிர்ணயித்த கூலி கிடைக்க வில்லை என்பதற்காக நேற்றையதினம் திருச்சி உறையூர்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதுகுறித்து திரு. ஆர். உமாநாத் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதை எடுக்கும்பொழுது அந்த விவாதத்தில் பேசிக்கொள்ளலாம், இன்றைக்கு அதை எடுத்துக்கொள்வதாக இல்லை.

(ஆ) பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் சரியாக இயங்காமை

திரு. சு. பாலன்: பாயின்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, வட சென்னையில் இயங்கி வருகின்ற பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம் சரியாக இயங்கவில்லை; அதனுடைய உற்பத்தி குறைவாக இருக்கிறது என்று.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னை பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. இந்த அவை நடப்பதில் ஏதாவது ஒழுங்கு முறை தவறி இருந்தால் அப்பொழுது பாயின்ட் ஆப் ஆர்டர் வரும். மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வருகின்ற பிரச்சினையைப் பற்றி, குறுகிய கால கேள்வியின் மூலம் கொண்டு வரலாம் அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரலாம் அல்லது ஒத்தி வைப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரலாம்.